ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यावत् स्वस्थमिदं शरीरमरुजं यावज्जरादूरतो
यावच्चेन्द्रियशक्तिरप्रतिहता यावत् क्षयो नायुषः ।
आत्मश्रेयसि तावदेव विदुषा कार्यः प्रयत्नो महान्
संदीप्ते भवने तु कूपखननं प्रत्युद्यमः कीदृशः ॥

எவ்வளவு காலம்வரை இச்சரீரமானது ரோகமின்றிச் சுகமாயிருக்கின்றதோ, எதுவரை இச்சரீம் மூப்பு அடையாமல் திடகாத்திரமாயுள்ளதோ, எதுவரை இந்திரியவலிமை குன்றுதோ? எதுவரை ஆயுளுக்கு நாசம் ஏற்படவில்லையோ; அதற்குள் தன் பரலோகத்திற்குற்ற சாதனங்களையடைய முயலவேண்டும். முதிர்ந்தவயதில் செய்யும் பிரயத்தினமானது தீப்பற்றிய வீட்டையணைப்பதற்கு புதிதாய்க்கிணறுவெட்டித் தண்ணீரெடுக்க முயலுவதற்கொப்பாகும்.

சிலர் தாம் இளமைப் பருவத்திலிருக்கிறோமென்றும் பரலோக க்ஷேமத்திற்குரிய ஸாதனங்களை இப்பொழுதே யனுஷ்டிக்க வேண்டியதவசியமில்லை யென்றும், தீர்மானித்துத் தோன்றியவாறு விதி நிஷேதங்களை விலக்கி விலங்குகளைப்போல் நடக்கிறார்கள். சரீரத்திற்குள்ள சக்தியும் ரோகங்களணுகும் சமயமும், இந்திரியங்களின் நிலைமையும் ஆயுளின் முடிவும் ஜரையாலேற்படும் கஷ்டமும் இச்சமயம் இவ்விதம் நேரிடுமென்று ஒருவராலும் தீர்மானிக்கமுடியாமலிருப்பதால்,எச்சமத்யதில்மேற்கூறியவைகளெல்லாம் மாறுபாடடையாமல் சரியான நிலைமையிலிருக்கின்றனவோ, அதேசமயத்தில் பால்யமாயிருந்தாலும் பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களை அனுஷ்டித்து அப்பயனையடையமுயலுவது முக்கியம். அவ்விதமன்றி முதிர்ந்த வயதை யெதிர்பார்த்து அனுஷ்டிப்பதாயிருந்தால் தீப்பற்றியிருக்கும் வீட்டையணைப்பதற்கு கிணறு வெட்டித் தண்ணீரெடுக்க முயலுவதையொக்கும். இதனால் நம்பால்யகாலத்திலேயே நற்கர்மாக்களை யனுஷ்டித்து சிரேயஸ்ஸை யடைய வேண்டுமேயல்லாது வேறு சமயத்தில் நடைபெறாது என்பது திண்ணம்.

ஆர்ய தர்மம்.
ருதிரோத்காரி-௵ ஆவணி-மீ அ௨

அத்வைத ஸபா, கும்பகோணம்.

இந்தஸபையானது சுமார் 30 வருஷங்களுக்கு முன் பிரும்மஸ்ரீ வைத்திநாதய்யரவர்கள் M. A. ஸாதுசேஷய்யரவர்கள் திவான் சேஷய்யாசாஸ்திரிகளவர்கள் முதலான பல பிரமுகர்களால், சம்பகாரண்ணியமென்னும் ராஜமன்னார்குடியில் விளங்கி வந்த மஹாமஹோபாத்தியாயர்களான பிரம்மஸ்ரீ தியாகராஜதீக்ஷிதரவர்களுடைய அனுக்கிரகத்தையும் ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்யஸ்வாமிகளுடைய அனுக்கிரகத்தையும் முன்னிட்டு உபக்கிரமம் செய்யப்பட்டது. அதற்கு முன் அத்வைதமதமும் நம் வேதாந்த சாஸ்திர கிரந்தங்களும் அபூர்வமாய்ச் சிற்சிலவிடங்களில் சில பெரியோர்களிடம் மாத்திரம் பிரகாசித்து கொண்டிருந்தன வென்பது யாவருமறிந்த விஷயமே. இச்சபை தோன்றியது முதல் கிரமமாய் வளர்பிறைத்திங்கள் போல் விருத்தியடைந்து தற்காலம் பற்பல விடங்களிற் பாவி எங்கும் பிரசித்தியாகிவிட்டது. இந்த ஸபை தோன்றியகாலத்தில் பத்துவித்வான்களை வரக்காண்பது மிகவும் அரிதாயிருந்தது. நாளடைவில் இச்சபை விருத்திபடையத் தொடங்கி இப்பொழுது 60வித்வான்கள்வரையில் விஜயம்செய்துகொண்டு வருகிறார்கள். இனி இச்சபை மேன்மேலும் அபிவிருத்தியடையுமென்பதிற் சந்தேகமில்லை. பிரும்மஸ்ரீ ராவ்பஹதூர் எஸ். அப்புசாஸ்திரிகளவர்கள் இச்சபைக்கு காரியதரிசியாயிருந்து அதன்காரியங்களை நன்குகவனித்து வருகிறார்கள்.

இவ்வருஷமும் சென்ற ஆனிமீ 31வ உபக்கிர ம் செய்யப்பட்டு வழக்கம் போல் ஸ்ரீ மடத்தில் ஒருவாரம் இச்சபை கூட்டப்பட்டு நடந்தேறியது. பிரும்மஸ்ரீ ராவ்பஹதூர் எஸ் அப்புசாஸ்திரிகளவர்கள் இரவு பகல் எப்பொழுதும் கூடவேயிருந்து சபையை நன்றாய் நடைபெறச் செய்து பண்டிதர்களுக்கு வேண்டிய செளகரியங்களையும் செய்து கொடுத்து மற்றுமுள்ள ஸபாஸம்பந்தமான காரியங்களை நன்கு நடை பெறச் செய்தார்கள். ஸ்ரீஜகத்குருமஹாஸ்வாமிகள் ஸ்ரீமடம் மானேஜர் K. குப்புசாமி அய்யர் அவர்களும் வழக்கம் போல் வித்வான்களுடைய ஸமாராதனையை ஸ்ரீமடத்திலேயே வெகு வி ரிசையாய் நடததிவைத்தார்கள். ஸபை ஆரம்பதினம் முத ஒவ்வொருநாளும் காலை 7½ மணிமுதல் 11மணிவரையிலும், மாலை 3மணி முதல் 5½ மணிவரையில் சாஸ்திரவாக்கியார்த்தங்களும் இரவில் 7½மணிமுதல் 9½மணிவரையில் சபாபரீக்ஷாதிகாரிகளால் எளிய தமிழ் நடையில் அரிய உபன்யாஸங்களும் நட தன. ஸபையின் கடைசிதினம் இச்சபையை விருத்திசெ தவர்களும், இன்னும் மேன்மேலும் அபிவிருத்தி செய்யவே டுமென்ற ஊக்கத்துடனிருப்பவர்களுமான பிரும்மஸ்ரீ K. தாராம அய்யரவர்கள், முடிகொண்டான் K. S. நாராயண மி அய்யரவர்கள், குன்னம் சுப்பிரமண்ய அய்யரவர்கள், C. வெங்கடராமசாஸ்திரிகளவர்கள் சப்ஜட்ஜி பாஷ்யம் அய்யங் ரவர்கள், ரெவின்யூடிவிஷனல் ஆபீஸர் B. V. சுப்பிரமணி யரவர்கள் முதலான பல அபிமானிகளும் வந்திருந்தார் முதன் முதலில் இச்சபையின் அபிவிருத்தியை யுத்தேசி ஸபாபரீக்ஷாதிகாரிகளான பிரும்மஸ்ரீ க. ச. கிருஷ்ணசாஸ் களவர்கள், சற்றுநேரம் பிரஸங்கித்த பிறகு பிரும்மஸ்ரீ B. சுப்பிரமணிய அய்யரவர்கள் மிருதுவாயும், ஸாரமாயுமுள்ள னிய வசனங்களால் ஸபையின் பெருமையையும், பா பற்றி நன்கு எடுத்துரைத்தார்கள். பிறகு C. S. வெங்க ராம சாஸ்திரிகளவர்கள் சபையின் சார்பாக சிலவார்த்தை மொழிந்தபின்னர் காரியதரிசியவர்கள் முடிவுரை கூறினா

பிறகு ஸ... பரீக்ஷாதிகாரிகளான பிரம்மஸ்ரீ க. ச. கிருஷ்ண சா...கிரிகளவர்கள், வெங்கிடுசுப்பா சாஸ்திரிகளவர்கள், யக்ஞ சுவாமி சாஸ்திரிகளவர்கள், விசுவநாத சாஸ்திரிகள்வர்கள் இவர்களுக்கு ஸன்மானம் செய்யப்பட்டது. முறையே சபாபண்டிதர்களுக்கும் கிரமமான சம்பாவனையுடன் அவரவர்கள் புதிதாய்ப் பரீக்ஷையில் தேர்ச்சிப் பெற்றதற்காக அளிக்கவேண்டி பரிசையும் சேர்த்து ஸன்மானம் செய்தார்கள். அத்துடன் இவ்வருஷத்திய ஸபை பூர்த்தியடைந்து ஸமீபகாலத்தில் இந்த ஸபையைப் பார்த்து வேறு இரண்டொரு இடங்களிலும் அத்...வைத ஸபைகள் ஆரம்பமாகி நடைபெருகின்றன. இவ்வி...ம் பல விடங்களில் நம் அத்வைத ஸபைவிருத்தி யடைந்தால் நம் மதமும் சாஸ்திரங்களும் விருத்தியடைவதோடு பண்டிதர்களுக்கும் குடும்ப பரணசிரமம் கொஞ்சம் குறைந்து தம் கர்மானுஷ்டானங்களில் பிரவிருத்தி யேற்படும் ஆகையால் இந்த ...கிரி ஸபைகள் அங்காங்குவிருத்தியடையும்படி செய்ய ஈசனை வேண்டுகிறோம்.

சுபம்.

ஸாமோபாகர்ம விஷயமாயுள்ள ஸந்தேஹங்கள்.

நடுக்காவேரி பிரும்மஸ்ரீ ஸ்ரீனிவாஸ சாஸ்திரியளால் ...மொழிபெயர்க்கப்பட்ட வைத்தியநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரம ...ண்டத்தில் 128ம் பக்கத்தில், குருவுக்கு மௌட்டியாதிதோ...ம் இருக்கும் பக்ஷத்தில் கன்னியாமாசம் கிருஷ்ணபக்ஷத்தில் ...கிற ஹஸ்தநக்ஷத்திர தினத்தில் ஸாமவேதிகள் உபாகர்மம் ...ய்கிறார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அடுத்த பக்கத்... இந்த ஆசாரத்தை பிரமாணமாகக்கொண்டு பாத்ரமத...த்தில் சுக்லபக்ஷம் ஹஸ்தநக்ஷத்திரத்தினத்தில் குருவுக்கு ...ட்டியாதி தோஷமிருந்தால் கன்னியாமாசம் கிருஷ்ணப...த்தில் எந்த தினத்தில் ஹஸ்த நக்ஷத்திரம் ஸாயங்காலம் 3

முகூர்த்தமிருக்கிறதோ அந்த தினத்தில் ஸாமவேதிகள் உபாகர்மம் செய்யவேண்டுமென்று தீக்ஷிதர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

1. இந்த தெக்ஷிண தேசத்தில் ஸாமவேதிகள் காதிராசாரியாரால் செய்யப்பட்ட கிருஹ்ய ஸூத்திரத்தை அனுஷ்டிக்கிறார்கள். வடக்கு தேசத்தில் கோபிலாசாரியாரால் செய்யப்பட்ட கிருஹ்ய ஸூத்திரத்தை ஸாமவேதிகள் அனுசரிக்கிறார்க[ள்] வர்ணாச்ரமத்தில் உபாகர்ம விஷயமாகச்சொல்லுகிற இடத்[தில்] காதிரகிருஹ்ய ஸூத்திரத்திலும் கோபில கிருஹ்ய ஸூத்தி[ரத்]திலும் சொல்லப்பட்ட விதிகளை தீக்ஷிதர் அவர்கள் பிரஸ்தா[பிக்]கவே இல்லை. மேலும் தீக்ஷிதர் அவர்களுடைய கிரந்தத்தில் [...] இடத்திலும் காதிரகிருஹ்யத்தைப்பற்றி பிரஸ்தாபம் இ[...] 123, 124ம் பக்கத்தில் கிருஹ்யத்தில் சொல்லப்பட்ட கா[...] லேயே உபாகர்மம்செய்யவேண்டுமென்று அத்திரிஸ்மிருதி[...] பிரமாணமாகக்கொண்டு தீக்ஷிதர் அவர்கள் எழுதியிருக்கிறா[ர்] அப்படி இருந்தும் காதிர கிருஹ்யத்தையாவது கோபிலகி[ருஹ்]யத்தையாவது தீக்ஷிதர் அவர்கள் பிரஸ்தாபிக்காததற்கு [கார]ணம் தெரியவில்லை. இதை ஆலோசிக்கும்பொழுது மேல்படி [கிரு]ஹ்யஸூத்திரங்களில் சொல்லப்பட்ட விதிநிஷேதங்களைச்[சொ]ல்லாமல் சிலருடையவோ பலருடையவோ ஆசாரத்தைப்பி[ரமா]ண்மாக வைத்துக்கொண்டு தீக்ஷிதர் அவர்க்ள் எழுதியிருக்[கிறார்]களென்று தோன்றுகிறது.

2. சில வருஷங்களில் கன்னியாமாசம் கிருஷ்ணபக்ஷ[த்திலா]வது, அல்லது பாத்திரபதம் கிருஷ்ணபக்ஷத்திலாவது ஹ[ஸ்]தநக்ஷத்திரம் வருகிறதே இல்லை. பாபவ, கிலக, விரோதி[...] ஆனந்த, பிங்கல, சித்தார்த்தி, துந்துபி, இந்தவருஷ[...] கன்னியாமாசத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் ஹஸ்த நக்ஷத்தி[ரம் வ]ரவில்லை. பாத்திரபதமாசத்தில் சுக்ல பக்ஷத்தில் வருகிற ஹ[ஸ்த] நக்ஷத்திர தினத்தில் குருவுக்கு மௌட்டியாதிதோஷம் இ[ரு]ந்தால் அதற்கடுத்துவருகிற ஹஸ்தநக்ஷத்திரம் கன்னியாமா[...]

கிருஷ்ண பக்ஷத்தில் வராமலிருக்கும் பக்ஷத்தில், ஸாமவேதிகள் எப்பொழுது உபாகர்மம் செய்யவேண்டுமென்று தீக்ஷிதர் அவர்களுடைய கிரந்தத்திலிருந்து புலப்படவில்லை.

3. பராபவ, கிலக, ஸாதாரண இந்த மூன்று வருஷங்களிலும் பாத்திரபதமாசத்தில் குஜனுக்கு மௌட்டியதோஷம் இருந்தது. ஆனால் அவ்வருஷங்களில் பாத்திரபதபூர்வ ஹஸ்த்திலேயே உபாகர்மம் செய்ததாக தெரிகிறது. பராபவ, க இந்த இரண்டு வருஷங்களிலும் கன்னியாமாஸம் கிருஷ் க்ஷத்தில் ஹஸ்த நக்ஷத்திரம் வரவில்லை. ஸாதாரணவரு தில் கன்னியா பூர்வபக்ஷ பிரதமையில்தான் ஹஸ்தநக்ஷத் ம் ஸர்யங்கலவியாபியாகயிருக்கிறது.

4. பார்பவ வருஷத்தில் கன்னியாமாசத்தில் பூர்வபக்ஷ ட ஒரு ஹஸ்தமும், அபரபக்ஷத்தில் 30-ம் தேதியில் ஸாய க்தில் ஒரு ஹஸ்தமும் வந்திருக்கிறது. பாத்திரபத பூர்வ ஹஸ்த நக்ஷத்திரத்தில் அங்காரக மௌட்டியம் இருப்ப , அதற்கு அடுத்து வருகிற கன்னியாமாசம், பூர்வபக்ஷ த நக்ஷத்திரத்தில், உபாமர்மம் செய்யாமல், தீக்ஷிதர் ர்களுடைய வசனத்தை பிரமாணமாகக்கொண்டு, புரட்டா மம் கடைசி தேதியில் யார் உபாகர்மம் செய்திருக்கிறார் தெரியவில்லை.

5. தீக்ஷிதர் அவர்களுடைய கிரந்தத்தில் எழுதப்பட்டு ஸ்மிருதி வசனங்கள் குரு சுக்கிரர்களுடைய மௌட்டிய ங்களைத்தான் சொல்லுகிறது. அங்காரகனுக்கு மௌட் தோஷம் ஏற்பட்டால் உபாகர்மம் செய்யக்கூடாதென்று ஸ்மிருதிவசனமாவது மூலப்ரமாணவசனமாவது வர்ஜ்ஜச ல் எழுதப்படவில்லை. பராசரமாதவீயம், ஹேமாத்திரி ன பெரிய நிபந்தன கிரந்தங்களில் அங்காரக மௌட் த்தைப்பற்றி பிரஸ்தாப்பிக்கப்படவில்லை. அங்காரனுக்கு சூரி ன மித்திரன் ஆனபடியினாலும், ஸிம்மராசி மித்திராசி ஆன யினாலும், ஸ்மிருதிக்காரர்கள் அங்காரகனுடைய மௌட்டிய

தோஷத்தை பெரிதாகப் பாராட்டாமல் உபாகர்மத்தை கண்டோக்தியாக நிஷேதிக்கவில்லை யென்று ஊஹிக்கலாம்:

6. காதிர கிருஹ்யத்திலும் கோபில கிருஹ்யத்திலும் பாத்திரபத பூர்வபக்ஷ ஹஸ்த நக்ஷத்திர தினம்தான் ஸாமவேத உபாகர்மத்திற்கு முக்கியகாலமாக விதிக்கப்பட்டிருக்கிறது. கிருஹ்யஸூத்திரத்தில் பூர்வபக்ஷஹஸ்தம் என்று சொல்லாமல் போனாலும், ருத்ரஸ்கந்தாசாரியார் அவர்களுடைய வியாக்கியான பிரகாரமும், வாக்கிய வசனப்பிரகாரமும் பூர்வபக்ஷ ஹஸ்ததினத்தைத்தான் முக்கியகாலமாக ஒப்புக்கொள்ளவேண்டியது. எல்லாவருஷங்களிலும பாத்திரபதமாசம் பூர்வபக்ஷத்தில் ஹஸ்தநக்ஷத்திரம் அவசியம் வரும், சிலவருஷங்களில்தான் பாத்திரபதமாசம் அபரபக்ஷத்தில் ஹஸ்தநக்ஷத்திரம் வரும். ஆகையால் எல்லாவருஷங்களிலும் ஸித்தமாக வருகிற பூர்வபக்ஷ ஹஸ்த தினத்தைத்தான் முக்கியகாலமாகக்கொள்ளவேண்டும். எவ்வெவ்வருஷங்களிலும் பாத்திரபத மாசத்தில் இரண்டு ஹஸ்தம் வருகிறதோ அவ்வவ்வருஷங்களில் முதல்ஹஸ்தத்திலேயாவது பின் ஹஸ்தத்திலேயாவது உபாகர்மம் செய்யலாமென்று ஸூத்திரக்காரர்களுடைய மதமில்லை. இரண்டுகிருஹ்யங்களிலும், சிராவணமாஸ பௌர்ணமாஸி தினத்தை கௌணகாலமாக சொல்லியிருக்கிறார்கள். வேறே ஒரு காலத்தையும் ஒருகிரந்தத்திலும் கௌணகாலமாக விதிக்கப்படவில்லை.

7. ஒருக்கால் முக்கியகாலத்தில் அங்காரகனுக்கு மௌட்டியதோஷம் ஏற்பட்டு அதில் உபாகர்மம் செய்யக்கூடாதென்று நிஷேதமிருந்தால், தோஷமில்லாத கௌணகாலத்தில் உபாகர்மம் செய்யலாம். பாத்திரபத பூர்வஹஸ்தத்துக்கு பிறகு கன்னியாமாசத்தில் சுக்கில பக்ஷத்திலோ, கிருஷ்ண பக்ஷத்திலோ வருகிற ஹஸ்த நக்ஷத்திர தினத்தை கௌணகாலமாக ஒரு கிருஹ்யகாரரும் ஸ்மிருதிகாரரும் விதிக்கவில்லை. ஆசௌசாதிகளினால் முக்கிய காலத்தில் உபாகர்மம் செய்யாமல் நின்று போனால், பிறகு வருகிற ஹஸ்தநக்ஷத்திர தினத்தில் உபாகர்மம்

செய்கிற ஆசாரத்தைக்கொண்டு, பாத்திரபதமாசம் பூர்வபக்ஷம்ஹஸ்த நக்ஷத்திரதினத்திற்குபிறகு வருகிற ஹஸ்த நக்ஷத்திரதினங்களை கௌணகாலமாக விதித்திருக்கிறதாக ஊஹிக்கக்கூடாது.

8. வர்ணாச்ரமத்தில் 128-வதுபக்கத்தில் (ஹஸ்தர்க்ஷ முதயேசுக்லே த்ரிமுகூர்த்தாஸ்தகேஸிதே) என்று ஸம்கிரஹக்காரருடைய வசனமிருக்கிறது. 132-ம்பக்கத்தில் சூரிய கிரஹணகாலத்தில் உபாகர்மம் வந்தால் சாந்தி சொல்லியிருக்கிறது. இந்த இரண்டு வசனங்களிலிருந்தும் கிருஷ்ணபக்ஷத்தில் வருகிற ஹஸ்ததினத்தையாவது சூரியோபராக காலத்தில் வருகிற ஹஸ்த தினத்தையாவது உபாகர்மத்திற்கு கௌணகாலமாக விதித்திருக்கிறததாகஊஹிக்கக்கூடாது கௌணகாலமாசம் சொல்லாதபடியால் பாத்திரபத பூர்வபக்ஷ ஹஸ்தத்தில் ஆசௌசத்தினால் உபாகர்மம் நடக்காதபோகும் விஷயத்தில்தான், அந்த இரண்டுவசனங்களுக்கு பிரவிருத்தி உண்டாகும்- மேலும் ஷடி ஸங்காஹ வசனமும், ஸூர்யோபராக சாந்திவசனமும், ஸாமகர்களுக்கே பிரவிருத்திக்கிறதாக நினைக்க நியாயமில்லை. ரிக்வேதிகளுக்கு ஆஷாட ஹஸ்தம் சிராவண ஹஸ்தம், பாத்திரபத ஹஸ்தம், சரத்காலஹஸ்தம் கௌணகாலமாக விதித்திருக்கிறபடியால், அவர்களுக்கும் ஒருக்கால் அபரபக்ஷத்திலாவது, ஸூர்யோபராக காலத்திலாவது உபாகர்மம் நேரிடலாம். மேலும் ஸங்கிரஹக்கார வசனமானது, பாத்திரபத பூர்வஹஸ்த தினத்தில் குஜனுக்கு மௌட்டியமிருந்தால் கன்னியாபர ஹஸ்தத்தில் உபாகர்மம் செய்யவேண்டியதென்று விதிக்கவில்லை. பூர்வபக்ஷஹஸ்தத்தில் உபாகர்மம் செய்தால், ஹஸ்தம் ஸாயந்திரிமுகூர்த்த வியாபியாகஇருக்கவேணுமென்றும்தான், அந்த வசனத்தினர்த்தம், வேறேஅர்த்தமில்லை.

9. மௌட்டியாதி தோஷங்களுக்கு உபாகர்மவிஷயமாக பிராயச்சித்தம் விதித்திருக்கிற பத்ததி கிரந்தத்தின் சிலவசனங்கள் வர்ணாச்ரமத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த

வசனங்களில் அங்காரக மௌட்டியத்திற்கு பிராயச்சித்தம் எழுதப்படவில்லை. இந்தக்காரணத்தினாலும் உபாகர்ம விஷயமாக அங்காரகனுக்கு மௌட்டியதோஷம் இல்லையென்று ஊஹிக்கலாம்.

10. வர்ணாச்ரமத்தில் 133-வது பக்கத்தில் ஸார்வபௌமீயத்திலிருந்து ஒரு வசனமெழுதப்பட்டிருக்கிறது. அந்தவசனத்தின் அர்த்தமாவது:—சாகாதீசன் சக்தியுள்ளஸமயத்தில் உபாகர்மம் செய்தால் சுபமென்று— இதை நிஷேதவசனமாக பாவித்தால், முக்யகாலம்,கௌணகாலம் இரண்டும் துஷ்டமாயிருந்தால், உபாகர்மமில்லாமலே போய்விடும். மேலும் ஷெ வசனம் எந்த ரிஷியுடையதென்று தெரியவில்லை.

11. இவ்வருஷம் கன்னியாமாசம் அபரபக்ஷத்தில் அனத்தியயனதினமான அமாவாஸையில் ஹஸ்தநக்ஷத்திரம் வருகிறது, அந்த அனத்தியயன தினத்தில் உபாகர்மம் செய்யலாமென்று விசேஷவசனம் இல்லாதவரையில் அதில் உபாகர்மம்செய்கிறது நியாயமில்லை. முன்சொன்ன பிரகாரம் கிருஷ்ணபக்ஷ ஹஸ்தத்தை கிருஹ்யகாரராவது ஸ்மிருதிகாரராவது கௌணகாலமாக கண்டோக்தியாக விதிக்கவில்லை.

12. முதல் ஹஸ்தத்தில் உபாகர்மம் நடக்காதபோனால் இரண்டாவது ஹஸ்ததினம் துஷ்டமாகவிருந்தாலும், உபாகர்மம் இரண்டாவது ஹஸ்தத்தில் செய்யவேண்டியதுதான். முதல் ஹஸ்ததினத்தில் மௌட்டியதோஷமிருந்தும் இரண்டாவது ஹஸ்த தினத்தில், மௌட்டியதோஷமோ, கிரஹணதோஷமோ, ஸங்கிராந்தி தோஷமோயிருந்தால், உபாகர்மம் இரண்டாவது ஹஸ்தத்தில் செய்யக்கூடாதென்றும், முதல் ஹஸ்தத்தில்தான் செய்யவேணுமென்றும்எல்லாரும் அங்கீகரிப்பார்கள். முதல் ஹஸ்தத்தில் மௌட்டியதோஷமும், இரண்டாவது ஹஸ்தத்தில் அனத்தியயன ஹேதுபூதமான தோஷமிருந்தால். முதல் ஹஸ்தத்தில் செய்யக்கூடாதென்றாவது, இரண்டாவது

ஹஸ்தத்தில் செய்யலாமென்றாவது விதியில்லை. அமாவாஸையில் அத்யயனம் கூடாதென்று கிருஹ்யத்திலேயே நிஷேதமிருக்கிறது.

13. வர்ணாச்ரமத்தில் 146, 147, 148, இந்தப்பக்கங்களில் நடுக்காவேரி பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளுடைய அபிப்பிராயம், கிருஹ்யத்திற்கு அனுகுணமாயிருக்கிறது. அதின் பிரகாரம் இவ்வருஷத்தில் சிராவணி பௌர்ணமாஸியிலும், பாத்திரபத சுக்லஹஸ்ததினத்திலும், குஜன் அஸ்தங்கதனாக இருக்கிறபடியால், பாத்திரபத பூர்வஹஸ்த தினத்திலேயே உபாகர்மம் செய்யவேண்டியதாக ஏற்படுகிறது. (பக்கம் 147).

☞ ஆஸ்திக சிஷ்டர்களான வித்வான்கள் மேல்கண்ட விஷயங்களை ஆராய்ந்துபார்த்து சாஸ்திரசம்மதமான காலங்களை ஸந்தேகமில்லாமல் நியாயவசனங்களோடு பதிலை தெரிவிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

திருவையாறு }
4—8—23. }

எம். சுப்பிரமணிய அய்யர்,
டிஸ்டிரிக்ட் முன்சீப்.

கடவுள் வாழ்த்து.

(சுங0-வது பக்கத்தொடர்ச்சி.)

महातमः प्रवर्तिते हिताहिते न लिम्पतः ।
अनादिपूरुषस्तुति प्रवर्तमानमानसम् ॥५॥

கடவுளுடைய கீர்த்தியை விரும்பினவரிடத்து நல்வினை தீவினை யென்னுமிரண்டு வினைகளும் அடையாவாம்.

இதனால் வாசிகமான நமஸ்காரம் கூறப்பட்டதாகிறது. முமுக்ஷுவுக்கு துக்கம்போல் சுகமும் அஞ்ஞான ஜன்யமானதால்

விலக்கத் தக்கதே. அஞ்ஞானமானது அஹந்தா மமதா இவை களுக்குக் காரணம். ஞானத்தால் அஞ்ஞானமும் அஹந்தா மமதைகளும் நசிக்கின்றன. அதனால் சரீராபிமானம் அற்றுப் போனபக்தனுக்கு சுகதுக்க ஸம்பந்தம் ஏற்படுகிறதில்லை.

दृगादिपञ्चकोद्भवाशया वियोजितात्मनः ।
प्रवर्तिते महापथे स्थिता विभान्ति संततम् ॥६॥

கடவுள் வழியிலே நின்றவர்கள் நீடூழிவாழ்வார்கள்.

கண்முதலிய புலன்களுக்கு விஷயங்களான ரூபம் முதலானதாலாகிய சுகங்களில் விருப்பமற்ற மஹாபுருஷனால் ஏற்படுத்தப் பட்ட சிரௌதஸ்மார்த்த ரூபமான தர்மமார்க்கத்தைக் கைவிடாமல் நன்கு அனுஷ்டிக்கின்ற மஹான்கள், அத்தர்மத்தால் ஆராதிக்கப்பட்ட பரமபுருஷனின் பிரஸாதத்தால் தடங்கலற்ற பிரகாச முள்ளவராகின்றனர்.

वर्णाश्रमाचारवता पुरुषेण परः पुमान् ।
विष्णुराराध्यते पन्था नान्यस्तत्तोषकारकः ॥

என்று மோக்ஷமார்க்கத்திற்கு கீழ்கூறிய மார்க்கத்தைத்தவிர வேறுவழியில்லை. கீழ்கூறிய நான்கு சுலோகங்களால், கடவுளை நினைத்தோரும் வாழ்த்தினோரும் அவன் வழி நின்றோரும், மோட்சத்தைப் பெறுவரென்று சொல்லப்பட்டது.

निजोपमानशून्यकं यमामनन्ति सर्वथा ।
तदंघ्रिसेवकात्परैर्नचाधिरुज्झितुं क्षमा ॥७॥

கடவுளுடைய திருவடிகளைச்சேராதவர்களுக்கு மனக்கவலை நீக்குதலில்லை.

ஒருவிதத்தாலும் தனக்கு நிகரில்லாதவரான ஈசுவரனுடைய பாதங்களை சேவிப்பவருக்கல்லது மற்றவருக்கு நெஞ்சிலே தோன்றுகின்றதுன்பங்களை நீக்குதல் அரிது.

அதாவது-கடவுளுடைய திருவடிகளைச்சேராதவர் பிறவிக்கு ஹேதுவாகிய காமவெகுளிமயக்கங்களை நீக்கப்படாமையினு

லே பிறந்தும், இறந்தும், அவற்றால் வருகிறதுன்பங்களுள் அழுந்துவாரென்பதாம்.

सुधर्मसिंधु देवतापदाब्जसेवकान्विना ।
तदुत्तरौ सुदुस्तरौ सदार्थकामसागरौ ॥८॥

கடவுளடிகளைச் சேராதவர்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களைக் கடத்தல் கூடாது.

ஆராதகர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸகலதர்மங்களுக்கும் ஆச்ரயரான பரமேசுவரனின் பாதாரவிந்தங்களைச் சேருகின்றவர்களைத்தவிர மற்றவர்களால் தர்மத்திற்கு அடுத்தவைகளான அர்த்தகாமக்கடல்களைகடற்றல் அரிது.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥

என்ற பகவானுடைய கட்டளைப்படி பகவதர்ப்பணமாகச் செய்யும் கர்மாக்களால், பகவத்ப்ரஸாதம் ஏற்பட்டு ச்ரேயஸ்ஸு உண்டாகும்.

गुणाष्टकैकमन्दिरप्रकृष्टदेववन्दने ।
वृथा शिरो नतं न चेत्सुसालभञ्जिकांगवत् ॥९॥

கடவுள் பாதங்களை வணங்காத்தலைகள் பயன்படாவாம்,

சைவாகமத்திற் சொல்லப்பட்ட, தன்வயத்தனுதல், இயற்கையுணர்வினனுதல்,முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பொருளுடைமை, முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்ற பிரசித்தமான எண்குணங்களுக்கு ஒரே நிலையானவரும் பிரகிருஷ்டருமான கடவுளை வணங்காதவனுடைய தலை [शिर:) பொம்மையின் தலைபோல் வீணேயாகும். பொம்மையின் கண்முதலானவை ரூபரஸாதிகளை யுணரும் சக்தியற்றதால் எப்படி வீணுகின்றனவோ அப்படியே கடவுளை வணங்காத் தலைகளும் என்று கருத்து.

எட்டுகுணங்கள் அபஹதபாப்மத்வம் முதல் ஸத்யஸங்கல்பம் வரையிலுள்ளவை என்றும் உபநிடதத்தில் காணப்படுகின்றன.

महेशपादपोतकावलम्बिनो नराश्च ये ।
तरन्ति ते भवांबुधिं कदापि नेतरे जनाः ॥१०॥

கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக்கடப் பார்கள். சேராதவர்கள் பிறவிக்கடலைக்கடக்கமாட்டார்கள்.

பரமேசுவரனுடைய பாதங்களாகிற மரக்கலத்தைச் சேர்ந்தவர் கள் ஜனன மரணரூபமான ஸம்ஸாரக் கடலைக்கடப்பார். அப் படியல்லாத ப்ராகிருதஜனங்கள் கடக்கமாட்டார்.

கே. வி. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

இந்துதேச வைத்தியம்.

(௪௪௫-வது பக்கத்தொடர்ச்சி.)

அரசாட்சிமாறுதலாலும், அரசியல் குழப்பத்தாலும், கலகங்களாலும் தேசத்தில் சமாதானமும், அதன் காரணமாய்ப் பிறக்கும் கல்வித்தேர்ச்சியு மில்லாமற் போயின. ஸமஸ்தான வைத்தியர்களும் தேசவைத்தியர்களுமற்றுப் போய்விடவே கிராமவைத்தியர்கள் தோன்றினர்கள். இக்கிராமவைத்தியர் களும் வைத்தியத்தைப் பலருக்குக் கற்றுக்கொடுத்தால் தம் பெயரும் பிழைப்பும் போய்விடுமென்றஞ்சி தம்மையடுத்தவர் கள் தம் சந்ததியார், ஆகிய இவர்களுக்கு மாத்திரம் வெகு ரகசியமாய்ச் சொல்லிக் கொடுத்தனர். இதுவும் பிறகு கிரமம் தவறித் தமக்குத் தெரிந்ததில் அறைகுறையாய்க் கற்றுக் கொடுக்கலாயிற்று. குருவிலும் சிடன் வரவர வைத்தியஞானத் ல்திகுறைந்துபோகவே ஆயிரங்கலையுடன் ஆதியில் பிரகாசித்த

வைத்தியமானது தற்காலம் அரை கலையுடன் மழுங்கி விளங்குகின்றது. வரிசைக்கிரமமாய் வைத்யம் செய்யக்கூடிய வைத்தியர்கள் அனேகமாயிப்பொழுது கிடைத்சல் அரிது. சிற்சில சமயங்களில் சிற்சில வியாதிகளுக்குக் கொடுக்கக் கூடிய சிற்சில முறைகளை யறிந்தவர்களே இப்பொழுதுள்ள வைத்தியர்களில் பெரும்பாலர், அனேகவிடங்களில் ஒரே முறை தெரிந்தவர்களுமுண்டு. இம்முறைகளில் பலமிகவும் உயர்ந்தவையென்று தாராளமாய்ச் சொல்லலாம். அபாரசக்தியுள்ள அம்முறைகளையுற்று நோக்குமளவில் மறைந்து கிடக்கும் மற்ற முறைகளையும் தெரிந்துகொள்ள பேரவா உண்டாகின்றது.

விசேஷ நன்மை பயக்கக் கூடிய மூலிகைகளெல்லாம் வெளியில் பிரஸித்தமாகிறதில்லை. அவ்வாறு வெளியிட்டால் தோஷமென்றுவது வெளியிடுகிறவர்களுக்குப் பலியாதென்றுவது அனேகர் மனப்பூர்வமாய் நம்பி அதிரகசியமென அவர்களால் கருதப்பட்ட அம்முறைகளையும் பலர் தங்கள் காயங்களுடன் நசிக்கும்படி செய்தார்கள். சர்ப்பம் தீண்டினவுடன் தக்ஷணமே அவ்விஷத்தை நிவர்த்தி செய்யக் கூடிய பல அந்தணர் பெருமான்கள் முற்காலத்திலிருந்ததாகவும் தமதுராணுவவீரர்களை நாகந்தீண்டுமேல் உடனுக்குடனே அதை சொஸ்தஞ் செய்வதற்காக பல பிராமணப் பண்டிதர்களை நியமித்ததாகவும் மஹா அலக்ஸாண்டர் [Alexander The Great] சொல்லியிருக்கின்றாரே. அம்மூலிகை இப்பொழுது யாவருமறிய வெளி வந்திருக்கின்றதா ? வெளிவராவிடினும் அதை நன்கறிந்த சில பிராமணர்களைக் கூடக் கண்டு பிடிப்பது அரிதிலும் அரிதாயிருக்கின்றதே ! ஆகவே தற்காலம் வைத்தியத்தில் பின்னடைந்திருக்கும் நாம் நமது முன்னோர்களின் கீர்த்திப் பிரதாபத்தை யெடுத்து வீணே பேசுவதால் அடையும் பயன் யாது? இது "பசித்தவன் பழைய கணக்கைப் பார்ப்பது" போலாகுமேயன்றிவேறில்லை. ஆட்டுமந்தை கிடந்தவிடத்தில் அதன் மயிர் கூட இல்லாமற் போனதுபோல் நமது முன்னோர்கள் வைத்தியத்திலும் தேர்ச்சியடைந்திருந்தார்களாவென்று நாமே சந்தே

கிக்கவும் கூடிய அளவு இத்தேசவைத்தியம் சொரூபகாசம டைந்துபோய்விட்டது.

(தொடரும்)

இந்து வைத்தியாபிமானி.

புத்தகவரவு.

தேவ பாஷா பாலபாடம், காதம்பரீ சங்கிரஹம். என்ற இவ்விரண்டு புஸ்தகங்களையும் வரப்பெற்றோம். இவை கும்பகோணம் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதரும் அபிநவபட்ட பாணரென்று பிருது வாய்ந்தவருமான ரா. வே. கிருஷ்ண மாசாரியாரவர்களால் இயற்றப்பட்டது. அதில் தேவபாஷா பாலபாடமென்னும் புஸ்தகம் ஸம்ஸ்கிருத பாஷையைப்பயில முயலும் பாலர்களுக்கு மிகவும் உபயோகமாயும் சீக்கிரத்தில் பாஷாக்ஞானத்தை யுண்டு பண்ணுந்திறமை பொருந்தியது மாயிருக்கிறது. காதம்பரி சங்கிரகம் என்பதில் பட்டபாண னென்கிற பிராசீனமஹாகவியால் வெளியிடப்பட்ட மிகவும் சிறந்த ஸம்ஸ்கிருத நடையுடன் கூடிய காதம்பரி என்னும் கிரந்தத்தின் சாராம்சங்களைச்சுருக்கமாய் நிரூபிக்கப்பட்டிருக் கிறது. ஸம்ஸ்கிருத பாஷைக்கும் அதன்பதங்களுக்கு மிருக் குமியற்கையான குணங்களை இதனுல் நன்கு அறிந்து கொள் ளலாம். காவ்யங்களில் அற்பஞான மேற்பட்ட பிறகு இதை அவசியம் படிக்கவேண்டும். தற்காலம் ஸம்ஸ்கிருத பாஷைக் கிருக்கும் அபிவிருத்திக்குறைவை விலக்க இதுபோன்ற கிரந் தங்கள் முக்கிய ஸாதனமாகுமென்பது வெளிப்படை. இது போல் மற்றுமுள்ள பண்டிதர்களும் தங்களாலியன்ற வரையில் வேலைசெய்ய முன்வந்து ஸம்ஸ்கிருத பாஷைக்கு இருக்கும் கிலானியை நீக்கி சீக்கிரம் விருத்தியடையும்படி செய்வார்க ளென்று நம்புகிறோம்.

தேவபாஷாபாலபாடம்	ரூ.	0—3—0
காதம்பரீ ஸங்கிரகம்	ரூ.	0—6—0

ஆர்யமத ஸம்வர்த்தினீ.

கடலங்குடி பண்டித நடேச சாஸ்திரிகளவர்களால் பத்திராதிபத்தியம் வகிக்கப் பெற்று "ஆரியமத ஸம்வர்த்தினீ" எனப்பெயர் பூண்ட ஓர் மாதாந்தப் பத்திரிகை யொன்று வரப்பெற்றோம். அதில் ஜோதிஷசாஸ்திரங்களிலிருக்கும் பலாகசியமான அர்த்தங்களை நம் தேசபாஷையில் எல்லோருக்கும் சுலபமாயறிய வேண்டி பிரஹத்ஜாதகம் ஸம்ஞா அத்தியாயம் இனிய தமிழ் நடையில் வெளியிடப் பட்டிருக்கிறது. சிராத்தத்தைப் பற்றி இது அவசியம் செய்ய வேண்டுமா வென்றும் அப்படிச் செய்தவன் பயன் யாது என்றும், அஃது எப்படி நம் பிதிருக்களுககுப் போய்ச் சேருகிறதென்றும் பலவிதமாய் சிலர் செய்யும் ஆக்ஷேபங்களுக்குத் தகுந்த சமாதானங் கூறி அனுஷ்டிக்கவேண்டியதுமுக்கியமென்று எடுத்துக்கூறியுள்ளார். மற்றும், சூரியநமஸ்காரத்தில் உபயோகிக்கப் பெறும் அருணம் முதல் ப்ரச்னத்தை பதவுரை, கருத்துரை விசேஷார்த்தங்களுடன் எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் வெளிவருவதானது மிகவும் லோகோபகார மென்பதை நாம் அதிகம் சொல்லவேண்டுவதில்லை. பின்னும் இப்பத்திரிகையில் விவாஹம் முதலியவைகளை உபயோகிக்கப்படும் மந்திரப்ரச்னத்திற்கும் பதவுரை, கருத்துரை,பலவிசேஷார்த்தங்களுடன் வெளியிடப்படுமென்று தெரிகிறது. 3-வது சஞ்சிகைமுதல் சாங்கியதத்வகௌமதி என்ற வாசஸ்பதி மிச்ரரின் வியாக்கியானத்துடன் ஈசுவரகிருஷ்ணகாரிகையும் தமிழ் உரையுடன் வெளிவரும். இம்மாதிரியான பத்திரிகை நம் தேசத்திற்கு அவசியமானதென்பது பற்றி அதற்கு நல்வரவு கூறுகின்றோம்.

உள் நாட்டு சந்தா.	ரூ 6—0—0
வெளிநாட்டு சந்தா.	ரூ 8—0—0

இப்பத்திரிகை கிடைக்குமிடம்,

கடலங்குடி பண்டித நடேசசாஸ்திரிகள்,

495, தங்கசாலைத்தெரு,

P. T. சென்னை.